# 2023ம் ஆண்டிற்கான பெற்றுக்கொள்ளப்படாத காப்புறுதி

## கொரியாவில் சேவை செய்த காலத்திற்கான காப்புறுதி தொகை தொடர்பான அறிவிப்பு

( Twejikum / 퇴직금 மற்றும் நாட்டுக்கு திரும்புவதற்கான காப்புறுதி / 귀국비용보험)

இலங்கைக்கும் தென் கொரிய குடியரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி,கொரியாவில் நீங்கள் சேவை செய்த காலத்தில் உங்களின் சம்பளத்தில் இருந்து குறைக்கப்பட்ட புறப்படல் உத்தரவாதக் காப்புறுதி (Twejikum) மற்றும் நாடு திரும்வதற்கான காப்புறுதி KRW 600,000/- என்பவற்றை இதுவரை கோராதவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை அதனுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் இணைத்து கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**மின்னஞ்சல் முகவரி– epscenterlk@yahoo.com**

- ❖ நீங்கள் ஏற்கனவே காப்புறுதியை பெற்றிருந்தால் அல்லது விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தால், கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட அல்லது முன்னெடுத்துச்செல்ல மாட்டாது.
- ❖ விண்ணப்பத்தை மின்னஞ்சலில் அனுப்பும் போது தயவு செய்து உங்கள் மின்னஞ்சலின் தலைப்பை **“ Unclaimed Insurance – விண்ணப்பதாரியின் பெயர்”** என குறிப்பிட்டு அனுப்பவும்.
- ❖ அனைத்து விண்ணப்பங்களும் மின்னஞ்சல் மூலமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை கருத்திற் கொள்ளவும்.
- ❖ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை அதனுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் அனுப்புவதக்கு விண்ணப்பதாரர் மட்டுமே பொறுப்பாவார்.
- ❖ பிழையான, பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்

### ① கொரியாவில் தொழில் காலத்தை நிறைவு செய்ததன் பின்னர் இலங்கைக்கு திரும்பிய, காப்புறுதிக்கு நேரடியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்/ விண்ணப்பதாரிகளுக்கானது,

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (பூர்த்தி செய்ய வேண்டிய காப்பீட்டு விண்ணப்பம் மற்றும் மாதிரி விண்ணப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)
2. கடவுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி - முதலாம் பக்கம் (சுயவிபரத்தரவை உள்ளடங்கிய பக்கம்)
3. தேசிய அடையாள அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி
4. குடிவரவின் போதான புறப்படல் முத்திரை/ வருகை முத்திரையுடன் கூடிய கடவுச்சீட்டு பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி
5. வங்கி கணக்கின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (செயற்பாட்டிலுள்ள வங்கி கணக்கு) [வங்கியின் பெயர், கிளை, கணக்கு வைத்திருப்பவரின் பெயர் மற்றும் கணக்கிலக்கம் என்பவற்றை குறிப்பிடவும்] (பொருத்தமான SWIFT குறியீட்டை விண்ணப்பங்களில் தெளிவாக குறிப்பிடவும்)

**கடவுச்சீட்டிலுள்ள பெயரும் வங்கிக் கணக்கிலுள்ள பெயரும் கீழே உள்ள**

❖

## ② விண்ணப்பதாரர்/ காப்புறுதியாளர் தற்சமயம் வெளிநாட்டில் இருப்பதால் அவருக்கு பதிலாக அவரை பிரதிநிதித்தி ஒருவர் விண்ணப்பித்தல்.

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (பூர்த்தி செய்யப்பட வேண்டிய காப்புறுதி விண்ணப்பம் மற்றும் மாதிரி விண்ணப்பம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.)
2. காப்புறுதி செய்பவரின் கடவுச்சீட்டின் முதல் பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி - (சுயவிபரத்தரவு உள்ளடங்கிய பக்கம்)
3. குடிவரவின் போது கடவுச்சீட்டின் புறப்படல் முத்திரை/ வருகை முத்திரையுடன் கூடிய பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (காப்புறுதி செய்பவரின் கடவுச்சீட்டு)
4. தொடர்பு எண்ணுடன் கூடிய பணியாளரின் கையால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அங்கீகாரக் கடிதம். (அவர்/ அவள் வசிக்கும் இடத்தில் இருந்து தூதுவரகத்தால் சான்றுப்படுத்தப்பட்டது)
5. காப்புறுதி செய்பவருக்கும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கும் உள்ள உறவைக் காட்டும் பிறப்புச் சான்றிதழ்/ திருமணச் சான்றிதழின் பிரதி (ஆவணங்கள் அனைத்தும் ஒரு சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்)
6. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் வங்கிக் கணக்கின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (செயற்பாட்டிலுள்ள வங்கிக்கணக்கு)

***கடவுச்சீட்டிலுள்ள பெயரும் வங்கிக் கணக்கின் பெயரும் கீழே உள்ள எடுத்துக்காட்டில் சுட்டிக்காட்டப்பட்டதைப் போல இருக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்ளவும்**

7. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி

இவ்வனைத்து ஆவணங்களும் 1. ஒரு வழக்கறிஞரால் உண்மை பிரதி என சான்றளிக்கப்படுதல் → 2. வெளியுறவு அமைச்சகத்தின் தூதரகப் பிரிவால் சான்றளிக்கப்படுதல் → 3. இலங்கையில் உள்ள கொரியா குடியரசின் தூதரகத்தால் சான்றளிக்கப்படுதல் → 4. மின்னஞ்சல் மூலம் இலங்கை EPS மையத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

## ③ விண்ணப்பதாரர்/ காப்புறுதி வைத்திருப்பவர் இலங்கைக்கு திரும்பியிருந்தால் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக அவர் சார்பாக ஒரு பிரதிநிதி விண்ணப்பித்தால்

**A.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (பூர்த்தி செய்ய வேண்டிய காப்பீட்டு விண்ணப்பம் மற்றும் மாதிரி விண்ணப்பம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.)

**B.** காப்புறுதி செய்பவரின் கடவுச்சீட்டின் முதல் பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி- (சுயவிபரத்தரவை உள்ளடங்கிய பக்கம்)

**C.** குடிவரவின் போது கடவுச்சீட்டின் புறப்படல் முத்திரை/ வருகை முத்திரையுடன் கூடிய பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (காப்புறுதி செய்பவரின் கடவுச்சீட்டு)

**D.** தொடர்பு எண்ணுடன் கூடிய பணியாளரின் கையால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அங்கீகாரக் கடிதம்.

**E.** அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி

***கடவுச்சீட்டின் பெயரும் வங்கிக் கணக்கின் பெயரும் கீழே உள்ள எடுத்துக்காட்டில் சுட்டிக்காட்டப்பட்டதைப் போல இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்**

**5.** அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் வங்கிக் கணக்கின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (செயற்பாட்டிலுள்ள வங்கி கணக்கு)

## இந்த அனைத்து ஆவணங்களும் உண்மை பிரதியென வழக்கறிஞரால்

## ④ காப்பீடு வைத்திருப்பவர் மரணித்திருந்தால் மற்றும் அவர் சார்பாக குடும்ப உறுப்பினர் ஒருவர் விண்ணப்பித்திருந்தால்

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி (பூர்த்தி செய்ய வேண்டிய காப்பீட்டு விண்ணப்பம் மற்றும் மாதிரி விண்ணப்பம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.)

**B.** நோய்வாய்ப்பட்டவர் தொடர்பான பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

| | |
|---|---|
| 1 ශ | மரண சான்றிதழின் பிரதி |
| 2 ශ | பிறப்பு சான்றிதழின் பிரதி |
| 3 ශ | கடவுச்சீட்டின் முதலாவது பக்கத்தின் பிரதி (சுயவிபரத்தரவை உள்ளடங்கிய) |
| 4 ශ | கடவுச்சீட்டில் குடிவரவின் மூலமான புறப்படல் முத்திரை /வருகை முத்திரையுடன் கூடிய பக்கத்தின் பிரதி |
| 5 ශ | தேசிய அடையாள அட்டையின் பிரதி (முன் மற்றும் பின் பக்கம்) |

'B' பிரிவின் கீழ் உள்ள ஆவண எண்கள் 1, 2, 5 ஆகியவை சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, மேலதிக அத்தாட்சிக்கு ஆவண எண் 3 மற்றும் 4 உடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனைத்து ஆவணங்களும் அசல் ஆவணங்கள் மற்றும் பிரதிகளுடன் சான்றுப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**ඇ பி[illegible]**

| | |
|---|---|
| 1ශ | மரணித்தவருக்கும் /காப்புறுதி செய்பவருக்கும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கும் இடையில் உள்ள உறவைக் காட்டும் பிறப்புச் சான்றிதழ்/ திருமணச் சான்றிதழின் பிரதி (ஆவணங்கள் அனைத்தும் சத்தியப்ப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளரினால் ஆங்கிலத்திற்கு மொழிப்பெயர்க்கப்படல் வேண்டும்.) |
| 2ශ | பிரதிநிதியின் ஸ்கேன் செய்யப்பட்ட வங்கிக்கணக்கு (செயற்பாட்டிலுள்ள வங்கிக்கணக்கு)<br>***கடவுச்சீட்டின் பெயரும் வங்கிக் கணக்கின் பெயரும் கீழே உள்ள எடுத்துக்காட்டில் குறிப்பிடப்பட்ள்ளவாறு இருக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்ளவும்** |
| 3ශ | பிரதிநிதியின் தேசிய அடையாள அட்டையின் பிரதி (முன் மற்றும் பின் பக்கங்கள்) |

'இ' பிரிவின் கீழ் ஆவண எண் 1 சத்தியப்பிரமாணம் [illegible]ளரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஆவண எண் 2 மற்றும் 3 உடன் அத்தாட்சிக்கா சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனைத்து ஆவணங்களும் அசல் ஆவணங்கள் மற்றும் பிரதிகளுடன் அத்தாட்சிக்கா சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

**இவ்வனைத்து ஆவணங்களும் 1. ஒரு வழக்கறிஞரால் உண்மை பிரதி என அத்தாட்சிப்படுத்தல் → 2. வெளியுறவு அமைச்சரகத்தின் தூதரகப் பிரிவால் அத்தாட்சிப்படுத்தல் → 3. இலங்கையில் உள்ள கொரிய குடியரசு தூதரகத்தால் அத்தாட்சிப்படுத்தல் → 4. மின்னஞ்சல் மூலம் இலங்கை EPS மையத்துக்கு அனுப்புதல்.**

காப்புறுதி செய்பவரின் பெயரானது வங்கிக் கணக்கில் உள்ளவாறு பின்வருமாறு குறிப்பிடப்படல்


DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

Type | Country Code | Passport No.

PASSPORT

PB LKA N5555555

Surname: THENNAKOON MUDIYANSELAGE AMBAGAHA GEDARA

Other Names: PRASAD PERERA

National Status: SRI LANKAN

Profession:

Date of Birth: 15/05/1983

ID No.: [redacted]32V

Sex: M

Place of Birth: XXXXXXXX

Holder's Sign

Date of Issue: 03/07/2015

Date of Expiry: 03/07/2025

AUTHORITY COLOMBO

PBLKATHENNAKOON<MUDIYANSELAGE<AMBAGAHA<GEDAR

N5555555<3LKAXXXXXX2MXXXXXXXXXXXXXXXXV<<<<96

வேண்டும்:

## உதாரணம்:

**கடவுச்சீட்டின் பெயர் :**

முதற்பெயர் - THENNAKOON MUDIYANSELAGE AMBAGAHA GEDARA
வேறு பெயர்கள் - PRASAD PERERA

**கடவுச்சீட்டிலுள்ள பெயரின் அடிப்படையில், வங்கிக் கணக்கின் பெயரானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.**

முறை 01. THENNAKOON MUDIYANSELAGE AMBAGAHA GEDARA PRASAD PERERA

முறை 02. T.M.A.G PRASAD PERERA

**முறை 03. T.M.A.G. P. PERERA**

**நீங்கள் ஏற்கனவே காப்பீட்டைப் பெற்றிருந்தால் அல்லது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தால், தயவுசெய்து மீண்டும் விண்ணப்பிப்பதைத் தவிர்க்கவும்.**

வெளியீடு - இலங்கை *EPS* நிலையம்
தொலைபேசி இல – *0112886945*
*[2023.01.17*